14.07.2025

**<u>அ.வ.எண் 196/2012</u>**

**<u>மனு எண் 12/2023 அனுமதிக்கப்பட்டு நீ.சா.1 பாலாஜி, வட்டாட்சியர், மதுராந்தகம் நீதிமன்ற தரப்பு சாட்சி முதல் விசாரணை</u>**

நான் தற்பொழுது மதுராந்தகம் வட்டாட்சியர் அலுவலகத்தில் வட்டாட்சியராக 20.06.2025 முதல் பணிபுரிந்து வருகிறேன். நான் நீதிமன்றத்தால் அழைப்பானை பெறப்பட்டு சாட்சியம் சொல்ல வந்துள்ளேன். வாதி தரப்பில் கோரப்பட்ட மனுவின் அடிப்படையில் 1380 பசலிக்கான புதுச்சேரி கிராம சர்வே எண் 4/1ஏ, 39/1 மற்றும் 40/2 ஆகியவற்றிற்கான 10(1) சிட்டா சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். அது அசலுடன் ஒப்பீடு பார்த்து நீ.ம.சா.ஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பட்டா எண் 235 மற்றும் பட்டா எண்335 ஆகியவற்றிற்கான கணினி பட்டா தாக்கல் செய்கிறேன், அது நீ.ம.சா.ஆ2, நீம.சா.ஆ3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>மனு எண் 14/2024 அனுமதிக்கப்பட்டு நீ.சா.1 பாலாஜி, வட்டாட்சியர், மதுராந்தகம் நீதிமன்ற தரப்பு சாட்சி முதல் விசாரணை</u>**

பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் பேரில் சர்வே எண்கள் 4/1ஏ, 39 மற்றும் 40/2 ஆகியவற்றின் நிலவுடமை மேம்பாட்டு திட்டத்தின் கிழ் 1984ம் ஆண்டு தயாரிக்கப்பட்ட ‘‘அ’’ பதிவேட்டின் உண்மை நகல் தாக்கல் செய்துள்ளேன். அந்த ஆவணம் நீ.ம.சா.ஆ4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பசலி வருடம் 1377, 1382 மற்றும்1385க்குரிய சர்வே எண்கள் 4/1ஏ, 39 மற்றும் 40/2

ஆகியவற்றின் அடங்கல் பதிவேட்டின் உண்மை நகல் நீ.ம.சா.ஆ5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**வாதிதரப்பு குறுக்குவிசாரணை**

1. நீமசா1ன் அசல் தற்பொழுது என்னிடம் உள்ளது என்றால் இருக்கிறது. நீமசாஆ1 எங்கள் அலுவலகத்தில் பராமரிக்கப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். நீமசாஆ1 ஆனது நெ.34 புதுச்சேரி கிராமத்தை சேர்ந்த 10(1) சிட்டா என்றால் சரிதான். நீமசாஆ1 ஆனது 1380 வருடத்திற்குரிய பசலி என்றால் 1380 முதல் 1390 வருடத்திற்கான பசலி ஆகும். நீமசாஆ1ன் பட்டா எண் 19 என்றால் சரிதான். சர்வேஎண் 4/1ஏ, 39, 40/2 ஆகிய சர்வே எண்கள் 28 நபர்களின் மீது கூட்டு பட்டா உள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன சர்வே எண்களில் உள்ள சொத்துகளில் 28 நபர்களுக்கும் உரிமை உண்டா என்றால் இல்லை. மேற்படி சர்வே எண்களில் மற்ற சர்வே எண்களும் உள்ளதால் 28 நபர்களுக்கும் உரிமை உள்ளது என்று சொல்ல முடியாது.

2. நீ.ம.சாஆ1ன் படி 28 நபர்களுக்கும் மேற்சொன்ன சர்வே எண்களில் உரிமை உண்டு என்றால் மொத்தம் 6 சர்வே எண்கள் உள்ளது. அதில் 28 நபர்கள் கூட்டு பட்டாதாரர்களாக உள்ளார்கள். அவரவரின் உரிமைகளை முறையான ஆவணங்கள் மூலம்தான் தீர்மானிக்க முடியும். மேற்சொன்ன சர்வே எண்களுக்கு ஒரு நபர் மட்டும் உரிமையாளர் என்று உரிமை கோர முடியாது என்றால் சரியல்ல, ஒரு நபர் மட்டும் உரிமை கோரலாம், ஆவணங்கள் அடிப்படையில் ஒரு நபர் மட்டும் உரிமை கோரலாம்.

3. நீ.ம.சாஆ5ல் சர்வே எண் 4/1ஏ, 39, 40/2 ஆகியவற்றிற்கு பட்டா எண் 19 குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் உள்ளது. நீமசாஆ5ல் சொல்லப்பட்ட பட்டா எண்19தான் நீமசா1 என்றால் சரிதான். நீமசாஆ5ல் சர்வே எண் 4/1ஏ, 39, 40/2 ஆகியவற்றிற்கு வெங்கடசுப்பா ரெட்டியார் பெயரில் மட்டும்தான் உள்ளது மற்ற நபர்கள் பெயர்கள் இல்லை என்றால் சரிதான், பட்டாதாரரில் முதல் பெயர் மட்டும் குறிப்பிட்டிருக்கும் மற்ற நபர்களை வகையறா என்று குறிப்பிடப்படும் ஆனால் அவ்வாறு நீமசாஆ5ல் குறிப்பிடப்படவில்லை. நீமசாஆ1ல் வெங்கடசுப்பா ரெட்டியார் பெயர் மட்டும்தான் உள்ளது, அதனால்தான் நீமசாஆ5ல் அவர் பெயர் மட்டும் கண்டுள்ளது என்றால் இருக்கலாம். நீமசாஆ5 ஆவணத்தில் வெங்கடசுப்பா ரெட்டியார் பெயர் மட்டும் உள்ளதால் அவர் மட்டும்தான் உரிமையாளர் என்று சொல்ல முடியாது என்றால் எனக்கு தெரியாது.

4. நீமசாஆ5 முன்னிலைக்கு மேற்சொன்ன சர்வே எண்களுக்கு வெங்கடசுப்பா ரெட்டியார் உரிமை கோர முடியுமா என்றால் முடியும். நீமசா5ல் மேற்சொன்ன சர்வே எண்களில் உள்ள சொத்துகளுக்கு வெங்கடசுப்பா ரெட்டியார் மட்டும் தனிப்பட்ட உரிமையாளர் என்று கோர முடியுமா என்றால் நீமசாஆ1ல் மொத்தம் 28 நபர்கள் உள்ளார்கள், ஆனால் நீமசாஆ5ல் வெங்கடசுப்பா ரெட்டியார் பெயர் மட்டும் உள்ளது, அதனால் என்னால் சரியாக சொல்ல முடியாது. நீமசாஆ5ல் பட்டா எண் 19 குறிப்பிடப்பட்டுள்ளது அதனால் பட்டா எண் 19ல் உள்ள பட்டாதாரர்கள் அனைவருக்கும் உரிமை உண்டு என்றால் உரிமை உண்டு.

5. பட்டா எண்19ல் வெங்கடசுப்பா ரெட்டியார் மட்டும் தனிப்பட்ட உரிமை கோரமுடியாது என்றால் சரிதான். நீமசாஆ4 ‘‘அ’’ பதிவேட்டில் சர்வே எண் 39, 40/2ல் வெங்கடசுப்பா ரெட்டியார் பெயரில் உள்ளது என்றால் சரிதான். நீமசாஆ4ல் பட்டா எண் 235 உள்ளது என்றால் சரிதான். நீமசாஆ4ல் கண்டுள்ள பட்டா எண்235தான் நீமசாஆ2 என்றால் சரிதான், ஆனால் நீமசாஆ2 ஆனது 5 நபர்கள் பெயரில் உள்ளது. நீமசாஆ4 ஆவணம் எந்த வருடத்திற்குரியது என்றால் நிலவுடமை மேம்பாட்டு திட்டம் 1984 முதல் 1987 வரை வருடத்திற்குரியது ஆகும், பொதுவாக நிலவுடமை மேம்பாட்டு திட்டம் 1984 முதல் 1987 வரை நடைபெற்றுள்ளது, ஆனால் புதுச்சேரி கிராமத்திற்கு நிலவுடமை மேம்பாட்டு திட்டம் 5.7.1985ல் வழங்கப்பட்டுள்ளது. பட்டா எண் 235 நான் கொண்டு வந்துள்ள ‘‘அ’’ பதிவேட்டில் உள்ளதா என்றால் இல்லை. நிலவுடமை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பட்டா எண் 235 என் அலுவலகத்தில் உள்ளதா என்றால் தெரியாது.

6. இன்றைய தேதியல் நீமசாஆ2 கணினி பட்டாதான் நடைமுறையில் உள்ளது என்றால் சரிதான். நீமசாஆ2ல் உள்ள சர்வே எண்களுக்கு மாவட்ட வருவாய் அலுவலர் உத்தரவு வழங்கியுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. நீமசாஆ4ல் உள்ள பட்டா எண் 235ல் உள்ள அனைத்து நபர்களுக்கும் உரிமை உள்ளதா என்றால் உள்ளது. நிலவுடமை மேம்பாட்டு திட்டத்தின் படி வழங்கப்பட்ட பட்டா எண்235ஐ பார்த்தால்தான் நான் சொல்ல முடியும் என்றால் சரிதான். நீமசாஆ3 சர்வே எண் 4/1ல் பட்டா எண் 335ல் உள்ள அனைத்து நபர்களுக்கும்

உரிமை உள்ளதா என்றால் மேற்படி பட்டாவில் 4/1ஏ1 மற்றும் 4/1ஏ4 என்று இரு சர்வே எண்கள் இருப்பதால் மேற்படி பட்டா எண்ணிற்கு அனைத்து நபர்களும் உரிமையாளர்கள் என்று அறுதியிட்டு சொல்ல முடியாது. பட்டா எண்ணில் பொதுவாக யார் பெயர் இருக்கும் என்றால் உரிமையாளர் பெயர்தான் இருக்கும்.

7. கூட்டு பட்டாவாக இருந்தால் கூட்டுபட்டாதாரர்கள் அனைவருக்குமே உரிமை உண்டு என்றால் அவ்வாறு சொல்ல முடியாது. பட்டா ஏன் கூட்டுபட்டாவாக கொடுக்கப்படுகிறது என்றால் ஒரு சர்வே எண்ணிற்கு பல நபர்கள் உரிமையாளர்களாக இருந்தால் கூட்டு பட்டா வழங்கப்படுகிறது. கூட்டு பட்டாவில் உள்ள அனைத்து நபர்களுக்கும் கூட்டு பட்டாவில் உள்ள சொத்துகளுக்கு உரிமை உள்ளது என்றால் ஒன்றிற்கு மேற்பட்ட புலஎண்கள் இருந்தால் அவ்வாறு சொல்ல இயலாது.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.**